RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-4 இதழ்-37 07 பிப்ரவரி வெள்ளிக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5

## இந்தியர்கள் நாடு கடத்தப்பட்ட விவகாரம் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் எதிர்க்கட்சிகள் போராட்டம்

புதுடெல்லி, பிப்.7

அமெரிக்காவிலிருந்து இந்தியர்கள் நாடுகடத்தப்பட்ட விவகாரத்தால் நாடாளுமன்ற இரு அவைகளின் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட நிலையில், இன்று மதியம் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் மாநிலங்களவையில் விளக்கம் அளிக்க உள்ளார்.




அமெரிக்க ராணுவ விமானத்தில் இந்தியர்கள் கைகளில் விலங்கிடப்பட்டு மனிதாபிமானமற்ற முறையில் கொண்டுவரப்பட்டதைக் கண்டித்து எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்துக்கு உள்ளே அமளியில் ஈடுபட்டனர். இதனால் அவை அடுத்தடுத்து ஒத்திவைக்கப்பட்டது. அவைக்கு வெளியேயும் எதிர்க்கட்சி எம்பிக்கள் தங்கள் கண்டனங்களை தெரிவித்தனர்.

காங்கிரஸ் கட்சியின் கே.சி. வேணுகோபால் உட்பட பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கைகளில் விலங்கு பூட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர். நாடாளுமன்றம் காலை 11 மணிக்கு கூடியதும் இந்த விவகாரத்தை எழுப்பி எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டனர். இதனால், அவை 12 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் அவை கூடியதும், அமெரிக்காவில் இருந்து நாடு கடத்தப்பட்ட 104 இந்தியர்கள் குறித்து விவாதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் மீண்டும் அமளியில் ஈடுபட்டனர். அவர்கள் அவையின் மையப்பகுதிக்கு வந்து முழக்கங்களை எழுப்பினர். அவை நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டாம் என்று மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா விடுத்த வேண்டுகோளை ஏற்க மறுத்து எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டனர்.

அப்போது, "நீங்கள் கூறும் விஷயத்தை அரசு கவனத்தில் கொண்டுள்ளது. அது வெளியுறவுத்துறை சம்மந்தப்பட்ட விவகாரம். அது மற்றொரு நாட்டின் கொள்கை சம்மந்தப்பட்டது. அரசு இந்த விவகாரத்தை கவனத்தில் கொண்டுள்ளது" என்றார். என்றாலும் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டதால், சபாநாயகர் அவையை மதியம் 2 மணி வரை ஒத்திவைத்தார்.

முன்னதாக, இந்த நாடு கடத்தல் விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும் என்று கே.சி. வேணுகோபால் அவை ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ் கொடுத்திருந்தார். அதில் டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்துடன் மத்திய அரசு மேற்கொண்டுள்ள ராஜதந்திர நடவடிக்கைகள் குறித்து விளக்கம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தி இருந்தார்.

இதேநிலைதான் மாநிலங்களவையிலும் நிலவியது. காங்கிரஸ், சிபிஐ, திரிணமூல் காங்கிரஸ், மற்றும் சிபிஎம் கட்சிகளின் உறுப்பினர்கள் இந்த பிரச்சினையை மாநிலங்களவையில் எழுப்பினர்.

செய்தியாள்ர்களிடம் பேசிய காங்கிரஸ் எம்.பி. சசிதரூர், "இந்திய குடிமக்களை கைகளில் விலங்கிட்டு நாடுகடத்திய ட்ரம்ப் நிர்வாகத்தின் நடவடிக்கை நாட்டுக்கான அவமானம். அவ்வாறு செய்யப்பட்டதை நாங்கள் எதிர்க்கிறோம். தங்கள் நாட்டில் சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்களை நாடுகடத்தும் முழு உரிமையும் அவர்களுக்கு உண்டு. ஆனால் திடீரென ஒரு ராணுவ விமானத்தில் ஏற்றி, கைகளில் விலங்கிட்டு அனுப்பி வைத்தது இந்தியாவுக்கான அவமானம், இது இந்தியர்களின் கண்ணியத்துக்கான அவமானம்" என்று தெரிவித்துள்ளார்.

## நெல்லையில் ரூ.4,400 கோடியிலான டிபி சோலார் நிறுவன உற்பத்தியை தொடங்கி வைத்தார் முதல்வர் ஸ்டாலின்!

நெல்லை, பிப்.7

திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டான் சிப்காட் வளாகத்தில் ரூ.4,400 கோடியில் அமைக்கப்பட்டுள்ள டிபி சோலார் நிறுவனத்தின் உற்பத்தியை தமிழக முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.




திருநெல்வேலி மாவட்டத்துக்கு இரண்டு நாள் சுற்றுப் பயணமாக வந்த தமிழக முதல்வர் மு .க. ஸ்டாலின் திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டானில் ரூ.4,400 கோடியில் அமைக்கப்பட்டுள்ள டிபி சோலார் நிறுவனத்தின் உற்பத்தியை தொடங்கி வைத்தார். பின்னர் டிபி சோலார் நிறுவன வளாகத்தை பார்வையிட்டார். அதைத் தொடர்ந்து புதியதாக ரூ.3,125 கோடி முதலீட்டில் கட்டப்படவுள்ள விக்ரம் சோலார் நிறுவனத்துக்கு அடிக்கல் நாட்டினார்.

தென் மாவட்ட மக்கள் வேலைவாய்ப்பில் பயன்பெறும் வகையில் நெல்லை மாவட்டம் கங்கைகொண்டானில் வணிக உற்பத்திக்கு தயார் நிலையில் உள்ள மிகப்பெரிய சூரிய ஒளி தகடு மற்றும் மாடுலர் தொழிற்சாலையை தமிழகம் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்ததுடன் மற்றொரு புதிய சூரிய ஒளி தகடு உற்பத்தி தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டினர். திறக்கப்பட்ட புதிய தொழிற்சாலையில் 80 சதவீதம் பெண்கள் தொழிலாளர்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய நவீன உலகில், பல்வேறு காரணங்களால் மின்சாரத்தின் தேவை நாளுக்கு நாள் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. இந்திய அளவில் அனல் மின்சாரம் தற்போது அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. இதனால், சுற்றுச்சூழல் கடுமையாகப் பாதிக்கப்படுவதாக உலகம் முழுவதும் அபாயக் குரல்கள் ஓங்கி ஒலிக்கின்றன. பூமி வெப்பமயமாதலுக்கு அனல் மின்சார உற்பத்தியும் ஒரு முக்கியக் காரணமாக அமைகிறது.

உலக நாடுகள் தற்போது புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை நோக்கி பயணத்தை மேற்கொண்டு வருகிறது. இதன் முயற்சியாக கரியமில வாயு வெளிப்பாட்டைக் குறைக்கும் வண்ணம் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களைப் பயன்படுத்துவதில் முனைப்புக் காட்டி வருகிறது, சூரிய ஒளி மின்சாரத்தை பெறும் வகையில் அதற்கான உதிரிபாகங்கள் தயாரிப்பையும் உள்நாட்டிலேயே மேற்கொள்வதற்கான பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகிறது.

அந்த வகையில் தமிழ்நாட்டில் தொழிற்சாலைகள் முதல் மக்கள் பயன்பாடு வரை மின்சாரத் தேவை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில் சுற்றுச் சூழலுக்கு உகந்த மாற்று மின்சார உற்பத்தியை பெருக்கும் வகையில் சோலார் மின்சார உற்பத்தியை தொடங்க தொழில் முனைவோருக்கு அறிவுறுத்தியது.

தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்த அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதன் ஒரு பகுதியாக நெல்லை மாவட்டம் கங்கைகொண்டான் பகுதியில் அமைந்துள்ள சிப்காட் தொழில் மைய வளாகத்தில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு மூலம் டாடா பவர் சோலார் மற்றும் விக்ரம் சோலார் நிறுவனங்கள் அமைக்க ஒப்பந்தம் கையெழுத்தானது. டாடா சோலார் நிறுவனம் ரூ.4,400 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வணிக உற்பத்திக்கு தயார் நிலையில் உள்ளது.

இதன் மூலம் 3,000 மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர் இந்நிறுவனத்தில் பணி செய்யும் 80 சதவீதம் தொழிலாளர்கள் பெண்களாக உள்ளனர். இதன் மூலம் அதிகம் பெண்களை கொண்டு இயக்கப்படும் சூரிய மின்சக்தி தகடு உற்பத்தி ஆலை என்ற பெருமையையும் இந்த ஆலை பெற்றுள்ளது.

இந்த ஆலையை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து பார்வையிட்டார். இந்த ஆலையில் சூரிய மின்சார தகடுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. உயர்ந்த தரத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்படும் சோலார் தகடுகள், மின் கலன்கள் பசுமையான மின்சார உற்பத்திக்கான எதிர்கால தேவையை பூர்த்தி செய்யும் என நம்பப்படுகிறது.

இதே போல் இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகக் குழுமம் ஆக விளங்கும் விக்ரம் சோலார் நிறுவனம் தமிழ்நாட்டில் 3 ஜிகாவாட் சோலார் செல் மற்றும் சோலார் மாடுல் உற்பத்தி தொழிற்சாலையை ரூ. 3125 கோடி மதிப்பில் அமைப்பதற்கான அடிக்கல்லையும் முதல்வர் நாட்டினார். இந்த நிறுவனத்தின் மூலம் 3000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்

## சென்னையில் காவலரை கொடூரமாக தாக்கிய ஆயுதப்படை காவலர்கள் 3 பேர் கைது, பணியிடை நீக்கம்

சென்னை, பிப்.7

காவலரை கொடூரமாக தாக்கிய ஆயுதப்படை காவலர்கள் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் குற்றச்சாட்டுக்கு உள்ளான 3 போலீஸாரையும் பணி இடை நீக்கம் செய்து காவல் ஆணையர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.



சென்னை கொண்டிதோப்பு பகுதியைச் சேர்ந்தவர் காவலர் ரங்கநாதன் (39). திருவல்லிக்கேணி காவல் நிலைய ரோந்து வாகன ஓட்டுநராக பணி செய்து வருகிறார். இவர் ஆயுதப்படைப் பிரிவில் பணியாற்றியபோது காவலர்கள் மதுரை ஆனந்த் (33), சென்னை புதுப்பேட்டை சுந்தரராஜன் (38), திண்டுக்கல் நிலக்கோட்டையைச் சேர்ந்த மணிபாபு (30) ஆகியோருடன் நட்புடன் இருந்துள்ளார். இவர்கள் 4 பேரும் 10 ஆண்டுகளாக ஒன்றாக பணி செய்து வந்துள்ளனர்.

இந்நிலையில், நண்பர்கள் 4 பேரும் நேற்று முன்தினம் எழும்பூரில் ஒன்றாக சந்தித்துள்ளனர். அப்போது, அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதில், ரங்கநாதனை சக காவலர்களான நண்பர்கள் 3 பேரும் சேர்ந்து சரமாரியாக தாக்கி உள்ளனர். இதில், அவருக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. தகவல் அறிந்து எழும்பூர் போலீஸார் சம்பவ இடக்கு விரைந்து ஆனந்த், மணிபாபு, சுந்தர்ராஜன் ஆகிய மூன்று பேரையும் பிடித்து விசாரித்தனர்.

தாக்குதல் குறித்து போலீஸ் தரப்பில் கூறப்படுவதாவது: ரங்கநாதன், சக காவலர் நண்பர்களான 3 பேரிடமும் சட்டம் ஒழுங்கு காவல் நிலையத்துக்கு பணி மாறுதலில் செல்ல உதவி கேட்டுள்ளார். அதற்கு ஆயுதப்படை காவலரான சுந்தர்ராஜன், தான் திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் பணி பெற்றுத் தருவதாக கூறி உள்ளார். இதற்கு ஒரு குறிப்பிட்ட தொகை தர வேண்டும் என கேட்டுள்ளார். அப்போது, ஆனந்த் மற்றும் மணிபாபு உடனிருந்துள்ளனர்.

இந்நிலையில், 2 மாதங்களுக்கு முன்னர் சொன்னபடி ரங்கநாதனுக்கு பணி இடமாறுதல் கிடைத்துள்ளது. ஆனால், பாதி பணத்தை மட்டுமே கொடுத்து மீதம் உள்ள பணத்தை கொடுக்கவில்லையாம். இது தொடர்பான பிரச்சினை காரணமாகவே நண்பர்களான காவலர்கள், ரங்கநாதனை தாக்கி உள்ளனர் என தகவல் கிடைத்துள்ளது. அதன் அடிப்படையில் துறை ரீதியிலான விசாரணை நடைபெற்று வருகிறது. இந்நிலையில் தாக்குதலில் ஈடுபட்ட 3 போலீஸாரும் கைது செய்யப்பட்டனர். மேலும், 3 போலீஸாரையும் பணி இடை நீக்கம் செய்து காவல் ஆணையர் அருண் இன்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## கைவிலங்கு, கால்களில் சங்கிலி...' அமெரிக்கா திருப்பி அனுப்பிய இந்தியர்கள் பகிர்ந்த அனுபவம்

புதுடெல்லி, பிப்.7

பயணம் முழுவதும் கைகளில் கைவிலங்கு, கால்கள் சங்கிலியால் பூட்டப்பட்டதாக அமெரிக்காவில் இருந்து சட்டவிரோதமாக தங்கியிருந்த காரணத்துக்காக திருப்பி அனுப்பப்பட்ட இந்தியர்கள் தங்கள் அனுபவத்தை பகிர்ந்துள்ளனர். முதல் கட்டமாக அமெரிக்காவில் இருந்து பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸுக்கு 104 பேர் வந்தடைந்தனர்.




"கடந்த ஜனவரி 24ம் தேதி அமெரிக்க எல்லைக்குள் நான் நுழைந்தபோது அந்த நாட்டு எல்லை பாதுகாப்பு அதிகாரிகள் என்னை பிடித்தனர். முறையான விசா மூலம் என்னை அமெரிக்காவுக்கு அனுப்புவதாக சொல்லிய டிராவல் முகமை நிறுவனம் என்னை ஏமாற்றி மோசடி செய்துவிட்டது. அமெரிக்கா செல்வதற்காக சுமார் 30 லட்சம் ரூபாய் வரை கடன் பெற்று செலவு செய்துள்ளேன்.

நான் பிரேசிலில் சில மாதங்கள் தங்கி இருந்தேன். அதன் பின்னர் அமெரிக்காவுக்கு சென்றேன். அங்கு 11 நாள் காவலில் இருந்த நிலையில் நாடு திரும்பி உள்ளேன். அமெரிக்காவில் இருந்து இந்தியா திரும்பியபோது எங்களின் கைகளில் கைவிலங்கு மற்றும் கால்கள் பயணம் முழுவதும் சங்கிலியால் பூட்டப்பட்டது. நாங்கள் வந்த விமானம் அமிர்தசரஸில் தரையிறங்கிய பிறகே சங்கிலி அகற்றப்பட்டது" என்று 36 வயதான ஜஸ்பால் சிங் தெரிவித்துள்ளார். அவர் பஞ்சாப் மாநிலம் குருதாஸ்பூர் மாவட்டத்தில் உள்ள ஹர்தோர்வால் கிராமத்தை சேர்ந்தவர்.

"அமெரிக்க அதிகாரிகள் எங்களை வேறொரு முகாமுக்கு அழைத்து செல்வதாக சொல்லி பயணத்தை தொடங்கினர். ஆனால், செய்தி மூலமாக நாங்கள் நாடு கடத்தப்பட்டதை அறிந்தோம். வெளிநாட்டுக்கு சென்று பணம் சம்பாதித்து குடும்பத்துக்கு உதவலாம் என்ற எங்களது கனவு இப்போது தகர்ந்தது" என்கிறார் ஜஸ்பால் சிங்கின் உறவினர் ஜஸ்பீர் சிங்.

பின்னணி என்ன? அமெரிக்காவில் கடந்த மாதம் 20ம் தேதி டொனால்டு ட்ரம்ப் அதிபராக பதவியேற்றார். அதன் பின்னர் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். ஐ.நா அமைப்புகளில் இருந்து வெளியேறுவது, உலக சுகாதார நிறுவனத்தில் இருந்து வெளியேறுவது, வங்கதேசம், பாகிஸ்தானுக்கு வழங்கும் நிதியுதவியை நிறுத்துவது, டிக்டாக் செயலிக்கு நிபந்தனை விதிப்பு என பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்துள்ளார்.

குறிப்பாக அமெரிக்காவில் முறையான ஆவணங்கள் இல்லாமலும் சட்டவிரோதமாகவும் குடியேறியவர்களை கண்டறிந்து நாடு கடத்தி வருகிறார். அதன்படி, பிரேசில், மெக்சிகோ, இந்தியா உட்பட பல்வேறு நாடுகளின் குடிமக்கள் அவரவர் நாட்டுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர். அதன்படி, சி17 என்ற ராணுவ விமானத்தில் நேற்று 104 இந்தியர்கள் அமெரிக்காவில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டனர். அவர்கள் வந்த ராணுவ விமானம் நேற்று பிற்பகல் 1.55 மணிக்கு பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் குருராம் தாஸ் சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

அமெரிக்க ராணுவ விமானத்தில் நாடு திரும்பிய 104 பேரில் 30 பேர் பஞ்சாபை சேர்ந்தவர்கள். ஹரியானா, குஜராத்தை சேர்ந்த தலா 33 பேர், மகாராஷ்டிரா, உ.பி.யை சேர்ந்த தலா 3 பேர், சண்டிகரை சேர்ந்த 2 பேர் அடங்குவர். முன்னதாக அமெரிக்காவில் இருந்து 205 இந்தியர்கள் நாடு கடத்தப்பட்டதாக தகவல் வெளியானது. எனினும், இந்தியர்கள் எத்தனை பேர் இதுவரை திருப்பி அனுப்பப்பட்டனர் என்று அதிகாரப்பூர்வமாக தகவல் வெளியிடவில்லை.

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்பை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கடந்த சில நாட்களுக்கு முன்னர் பிரதமர் மோடி பேசினார். பின்னர் ட்ரம்ப் கூறுகையில், ''சட்டவிரோத குடியேற்றம் குறித்து பிரதமர் மோடியிடம் பேசினேன். அந்த விஷயத்தில் எது சரியோ அதை இந்தியா செய்யும் என்று தெரிவித்தார்'' என்று கூறினார். இதையடுத்து இந்தியர்களை திருப்பி அனுப்பும் நடவடிக்கை தொடங்கி உள்ளது.

இதற்கிடையில், வரும் 13ம் தேதி பிரதமர் மோடி அமெரிக்கா செல்கிறார். அப்போது அதிபர் ட்ரம்பை சந்தித்து இருநாட்டு உறவை மேம்படுத்த பல்வேறு முக்கிய விஷயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். அமெரிக்காவில் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்தியர்கள் சட்டவிரோதமாக தங்கியிருப்பதாக புளூம்பெர்க் கடந்த மாதம் புள்ளி விவரம் வெளியிட்டது.

## 'செட்டிங்' செய்கிறார்களோ? இபிஎஸ் ஆக்கபூர்வமாக செயல்பட அமைச்சர் ரகுபதி அறிவுரை

சென்னை, பிப்.7

"கடந்த சில நாட்களாக எடப்பாடி முன்வைத்த குற்றச்சாட்டுகளான அண்ணாநகர் பாலியல் வழக்கு, காரில் திமுக கொடிகட்டிய ரவுடிகள் தொடங்கி நேற்றைய கள்ளச் சாராய வீடியோ வரை குற்றச்சாட்டுகள் அனைத்திலும் அடுத்த நாளே அவர்கள் அதிமுகவினர் எனத் தெரியவந்து, கைது செய்யப்படுகிறார்கள்.



இப்படிப்பட்ட மலிவான அரசியல் செய்வதை விடுத்து எடப்பாடி பழனிச்சாமி ஆக்கபூர்வமான எதிர்கட்சித் தலைவராக செயல்படுவாரா?" என்று தமிழக சட்டத்துறை அமைச்சர் ரகுபதி கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில், "சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகில் வளையமாதேவியில் டாஸ்மாக் பாரில் கள்ளச் சாராயம் விற்கப்படுவதாக வீடியோ ஒன்று வெளியானது. அதனை எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் பதிவில் வெளியிட்டு 'அய்யகோ, திமுகவை பாருங்கள்' என்று எழுதியிருந்தார். இந்த வீடியோவின் உண்மைத்தன்மையை ஆராய்ந்தால் வீடியோவை வெளியிட்டது அதிமுகவின் அண்ணா தொழிற்சங்க வட்ட செயலாளராக இருந்த ராஜாவின் உறவினரான ரவி என்பவர் என்பதும் அவருக்கு கள்ளச் சாராயம் வாங்கி வந்து கொடுத்ததே அதிமுகவின் ராஜா தான் என்பதும் விசாரணையில் தெரியவந்து அந்த அதிமுக பிரமுகர் ராஜா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில நாட்களாக எடப்பாடி முன்வைத்த குற்றச்சாட்டுகளான அண்ணாநகர் பாலியல் வழக்கு, காரில் திமுக கொடிகட்டிய ரவுடிகள் தொடங்கி நேற்றைய கள்ளச் சாராய வீடியோ வரை குற்றச்சாட்டுகள் அனைத்திலும் அடுத்த நாளே அவர்கள் அதிமுகவினர் எனத் தெரிய வருகிறது; கைது செய்யப்படுகிறார்கள். பாம் வைப்பதும் நானே எடுப்பதும் நானே என்ற கணக்கில் அவசர அவசரமாக எடப்பாடி ட்வீட் செய்வதும், அதனை அதிமுகவினர் பரப்புவதும் உண்மை வெளியானவுடன் அமைதி காப்பதும் என ஒரே 'பேட்டர்ன்'தான். ஒரு அஜெண்டாவுடனேயே செயல்பட்டு வருகிறார்.

எதிர்க்கட்சித் தலைவர் என்பது அரசியலில் முக்கியமான பொறுப்பு. ஆனால் சொந்த கட்சியினர் ஒரு குற்றத்தில் ஈடுபட்டது தெரிய வந்தால் உடனே அரசை குறை கூறி ஒரு அறிக்கையை வெளியிட்டு அந்த சம்பவத்தையே திசை மாற்றி மக்களை குழப்பும் பணியைத்தான் எடப்பாடி செய்து வருகிறார். ஒருவேளை 'செட்டிங்' செய்கிறார்களோ என்றும் சந்தேகம் வருகிறது. இப்படிப்பட்ட மலிவான அரசியல் செய்வதை விடுத்து எடப்பாடி பழனிச்சாமி ஆக்கபூர்வமான எதிர்கட்சித் தலைவராக செயல்படுவாரா?" என்று அவர் கூறியுள்ளார்.



தூத்துக்குடி மாநகராட்சி பகுதியான வடக்கு மண்டலத்தில் மாதாந்திர பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம் நடைபெற்றது இக் கூட்டம் மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் நடைபெற்றது . பொதுமக்களிடம் மனுக்களை பெற்றுக் கொண்டு குறைகளுக்கு உடனடி தீர்வு காண்பதாக வாக்குறுதி அளித்தார். அவர்களுடன் மாநகராட்சி ஆணைய மதுபாலன் துணை ஆணையர் மண்டல தலைவர்கள் மாமன்ற உறுப்பினர்கள் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்..




திருப்பூர் மாநகராட்சி அலுவலக கூட்டரங்கில் சொத்தோரி மேல் முறையீட்டு குழு கூட்டம் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் ஆணையாளர் ராமமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. உடன் துணை மேயர் பாலசுப்ரமணியம், துணை ஆணையாளர் சுந்தர்ராஜன், மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்..

## குன்னூர் நகர பகுதியில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் ரூ.30ஆயிரம் அபராதம்



குன்னூர், பிப்.7

நீலகிரி மாவட்டத்தில் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை செய்யப்பட்டுள்ளதால் இது தொடர்பாக மாவட்ட முழுவதும் உள்ள உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் நேற்று குன்னூர் மார்க்கெட் பகுதியில் சப் கலெக்டர் சங்கீதா தலைமையில் வட்டாட்சியர் ஜவகர் மேற்பார்வையில் வருவாய் ஆய்வாளர் சோபனா உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் இரண்டு பிரிவுகளாக கடைகளில் ஆய்வு மேற்கொண்டனர்.அப்போது தடை செய்யப்பட்ட 15 கிலோ பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர்களுக்கு ரூ.30,000 அபராதம் விதிக்கப்பட்டது. மேலும் இதே போல் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை செய்தால் சம்பந்தப்பட்ட கடை வியாபாரிகள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், கடைகளுக்கு சீல் வைக்கப்படும் எனவும் சப் கலெக்டர் எச்சரித்தார்.



திருப்பூர் மாநகராட்சி மண்டலம்4 மாட்டுக்கொட்டாகையில் உள்ள சுகாதார அலுவலகத்தில் பணியாற்றும் 600 சுகாதார பணியாளர்களின் வருகை பதிவேட்டினை திருப்பூர் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார், ஆணையாளர் ராமமூர்த்தி ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.உடன் துணை மேயர் பாலசுப்ரமணியம், மாநகர நல அலுவலர் முருகானந்தம், சுகாதாரக் குழு தலைவர் கவிதா நேதாஜி கண்ணன், மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்..

## காரைக்குடி சோமநாதபுரம் காவல் நிலையத்தில் பெண் சார்பு ஆய்வாளர் மீது தாக்குதல்

காரைக்குடி, பிப்.7

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே சோமநாதபுரம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருபவர் பிரணிதா.

நேற்று இரவு அங்கு பிரச்னை தொடர்பாக புகார் மனு அளிப்பதற்காக விடுதலை சிறுத்தைகள் கட்சியின் வடக்கு மாவட்ட செயலாளர் இளைய கவுதமன் வந்திருந்தார்.

அவர் சார்பு ஆய்வாளர் பிரணிதாவிடம் வாக்குவாதம் செய்ததாகவும், பின் தகராறாக மாறி சார்பு ஆய்வாளர் தாக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டதாக புகார் எழுந்தது. காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வெள்ளாளப்பட்டியில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” மூன்றாம் கட்ட திட்ட முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நலத்திட்ட உதவிகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி. கணேசன் அவர்கள் வழங்கினார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, , மாவட்ட வருவாய் அலுவலர்இரா. ரவிக்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

## காட்பாடி சார் பதிவாளர் அலுவலகத்தில் முத்திரைத்தாள் சிறப்பு முனைப்பு முகாம்

வேலூர், பிப்.7

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காட்பாடி சார் பதிவாளர் அலுவலகத்தில் காட்பாடி, கே.வி.குப்பம், சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு உட்பட்ட 2025 ஆண்டுக்கான முத்திரைத்தாள் சிறப்பு முணைப்பு இயக்கம் முகாம் நடைபெற்றது. தனி துணை ஆட்சியர் முத்திரைத்தாள் (பொறுப்பு) சீதா, தனி வட்டாட்சியர் முத்திரைத்தாள் ஆர்.பாலமுருகன், காட்பாடி சார் பதிவாளர் பிரகாஷ், கே.வி.குப்பம் சார்பதிவாளர் சத்தியமூர்த்தி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.




இந்நிகழ்ச்சியில் சுமார் 28 மனுக்கள் பெறப்பட்டு ரூபாய் 12,73,000 அரசுக்கு வருவாய் ஏற்படுத்தி, பயனாளர்களுக்கு உரிய பத்திரங்களை வழங்கப்பட்டது. சுமார் 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர். இதேபோல் வேலூர், குடியாத்தம், பள்ளி கொண்டா உள்ளிட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் இம்முகாம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## கே.வி.குப்பம் ஒன்றிய பாரதிய ஜனதா கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம்!

வேலூர் பிப்7

வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் தாலுகா, லத்தேரி பேருந்து நிலையம் அருகில், பாரதிய ஜனதா கட்சி சார்பில், கே.வி.குப்பம் கிழக்கு ஒன்றிய பா.ஜ.க கிழக்கு ஒன்றிய தலைவர், இந்திய முன்னாள் படை சி.ஆர்.பி.எப் வீரரும் பாஜகவின் எழுச்சி நாயகருமான ஜெயப்பிரகாஷ் முன்னிலையிலும், மதுரை திருப்பரங்குன்றம் முருகன் மலையில் இந்துக்களுக்கு எதிராக அசைவ உணவு சாப்பிட்டு அவதூறாக பேசி சமூக வலைதளங்களில் பகிர்ந்து, சட்ட விரோதமாக, இறையாண்மையை தூண்டி, ஒற்றுமையை சீர்குலைக்கும் விதமாக செயல்பட்ட திமுகவினர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கக் கோரி பா.ஜ.க.



கிழக்கு ஒன்றிய தலைவர் பு.சங்கர் தலைமையில், கட்சி நிர்வாகிகள் மற்றும் இந்து அமைப்பபினர்கள் சார்பில் பாரத் மாதா கி ஜே, காப்போம் காப்போம் திருப்பரங்குன்றம் முருகன் மலையை காப்போம், வீரவேல் வெற்றிவேல் என கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தால் பா.ஜ.க.வினர் மற்றும் இந்து அமைப்பிணர்கள் இணைந்து நடத்தியதால் இப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது. இதனை கட்டுப்படுத்தும் விதமாக காவல்துறையினர் இவர்களை கைது செய்து, சமரச பேச்சுவார்த்தை நடத்தி மாலை 6மணியளவில் இவர்களை விடுவித்தனர். இதனைத் தொடர்ந்து இப்பகுதி வழக்கம் போல் அமைதி மார்க்கமானது குறிப்பிடப்பட்டது.

## மானாமதுரையில் 5 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி 2ம் கட்டமாக கிராம உதவியாளர் சங்கம் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

மானாமதுரை பிப்.7

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக தமிழ்நாடு கிராம உதவியாளர் சங்கம் மானாமதுரை வட்டத் தலைவர் தர்மராஜன் தலைமையில் ஐந்து அம்ச கோரிக்கைகளை தமிழக அரசு நிறைவேற்றக்கோரி கடந்த ஜன23 தேதியும் மற்றும் பிப்05 (நேற்று )கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வருகின்ற பிப்27 அன்று ஒரு நாள் சிறு விடுப்பு போராட்டத்தில் ஈடுபட உள்ளனர்.



ஐந்து அம்ச கோரிக்கைகள் கிராம உதவியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட காலம் வரை ஊதியம் வழங்க வேண்டியும் கடந்த 30 ஆண்டுகளாக தொடர்ந்து கோரிக்கைகளை வைத்து நிறைவேற்றி கொடுக்க முன்வராத போது தங்களது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் கிராம உதவியாளர்களை அரசு ஊழியர்களின் பட்டியலில் டி பிரிவில் சேர்க்கக் கோரியும் கிராம உதவியாளர்கள் இறந்துவிட்டால் அந்த குடும்பம் வாழ வழி தெரியாமல் தவிக்கும் என்பதை நினைவு கூறும் வகையில் முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் 1990 ஆண்டு கருணை அடிப்படையில் வாரிசு வேலைகளை வழங்கினார். கடந்த 23 ஆண்டுகாலம் பயன் பெற்று வந்த வாரிசு சேவையை மீண்டும் வழங்க வேண்டி வலியுறுத்தியும் அரசு ஆணை 33/2023 ரத்து செய்யக்கோரியும் கடந்த 207 க்கு பிறகு பணிக்கு வந்த சிபிஎஸ் திட்டத்தில் பணி பார்த்து ஓய்வு பெற்று இறந்து போன கிராம உதவியாளரிடம் பிடித்தம் செய்த தொகையும் அதற்குண்டான அரசு பங்கீடும் இதனால் வரை வழங்காமல் இருப்பதை வழங்க வலியுறுத்தினர். புதிதாக பணியில் சேர்ந்து கிராம உதவியாளர்கள் சிபிஎஸ் தற்காலிகமாக வழங்கப்பட்டு ஊதியம் வழங்கப்படுகிறது எனவே சிபிஎஸ் எண் நிரந்தரமாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் கிராம உதவியாளர்கள் கிராம பணி பார்ப்பதற்காக பணியில் அமர்த்தபட்டவர்களை கிராம பணியை தவிர பல்வேறு மாற்றுப் பணிகளுக்கு பயன்படுத்தி வருவதை தவிர்க்க வேண்டும் என்றும் அன்றைய வருவாய் நிர்வாக ஆணையர் போட்டோ உத்தரவை நடைமுறை படுத்தாமல் மாற்றுப் பணிகளுக்கு பயன்படுத்துவதை நிறுத்த வலியுறுத்தியும் அரசுக்கு எதிராக கோஷமிட்டனர். இந்த கவன ஈர்ப்பு போராட்டத்தை அரசு கவனிக்குமா என்ற எதிர்பார்ப்பில் தமிழ்நாடு கிராம உதவியாளர் சங்கத்தினர் உள்ளனர்..

# இராமநாதபுரம் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஓய்வூதியர்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



இராமநாதபுரம், பிப்.7

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன் ஜீத் சிங் காலோன், தலைமையில் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஓய்வூதியர்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. கருவூல கணக்குத்துறை கூடுதல் இயக்குநர் (மின் ஆளுமை) செல்வி அ.நிருபாராணி, மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் ஓய்வூதியர்கள் மற்றும் ஓய்வு+தியர் சங்க பிரதிநிதிகளிடமிருந்து ஓய்வூதியம் தொடர்பாக பெறப்பட்ட மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட அலுவலர்கள் எடுத்துரைத்தனர்.

மாவட்ட ஆட்சித்தலைவர் பேசுகையில்,

ஓய்வூதியர்கள் தங்களுடைய கோரிக்கைகளாக ஓய்வு+தியம் நிலுவை தொடர்பாகவும், மருத்துவ காப்பீடு தொகை கிடைக்கப்பெறாமல் இருப்பது தொடர்பாகவும் மனுக்களை அளித்துள்ளீர்கள். இது தொடர்பாக சம்மந்தப்பட்ட அலுவலர்கள் தங்களுக்கு தங்கள் மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாகவும், மேல்முறையீடு தொடர்பாகவும் உரிய பதிலுரை அளிப்பார்கள்.

மேலும் ஓய்வு+தியர்கள் தங்களுக்கு ஓய்வு+தியம் பெறும்போதும், வேறு பல ஓய்வூதிய பலன்கள் பெறுவதற்கும் ஏற்படும் அலைச்சலையும், பயணத்தையும் குறைப்பதற்கு ஆன்லைன் மூலமாக செயலியை பயன்படுத்தி பெறுவது தொடர்பாக இக்கூட்டத்தில் எடுத்துரைக்கப்படும். எனவே இக்கூட்டத்தில் தங்களுக்குள்ள சந்தேகங்களையும், ஓய்வு+திய நிலுவைப் பயன்களை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம் என்பதை அறிந்து கொண்டு பயன்பெற வேண்டுமென தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு) கல்யாண சுந்தரம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பிரபாகர், மாவட்ட கருவூல அலுவலர் சண்முக சுந்தரி, ஓய்வூதியதாரர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தேனியில் மாநில அளவிலான குடியரசு தின குழு விளையாட்டு போட்டிகளை தொடங்கி வைத்த மாவட்ட ஆட்சித்தலைவர்



தேனி, பிப்.7



தேனிமாவட்ட விளையாட்டு மைதானத்தில், பள்ளிக்கல்வித்துறை சார்பில் 14 வயதுக்குட்பட்ட மாணவ, மாணவியர்களுக்கான 4ஆவது மாநில அளவிலான குடியரசு தின குழு விளையாட்டு போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.வி.ஷஜீவனா, சட்டமன்ற உறுப்பினர்கள் கே.எஸ்.சரவணக்குமார் (பெரியகுளம்) ஆ.மகாராஜன் (ஆண்டிபட்டி) ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் பேசியதாவது,

குடியரசு தின குழு விளை யாட்டுப் போட்டிகள் முதன்முறையாக தேனி மாவட்டத்தில் நடைபெறுகிறது. 20242025ஆம் கல்வி ஆண்டிற்கான 14 வயதிற்குட்பட்ட மாணவ மாணவியர்களுக்கான 4ஆவது மாநில அளவிலான குடியரசு தின குழு விளையாட்டுப் போட்டிகள் 06.02.2025 முதல் 11.022025 வரை கால்பந்து, வளைகோல் பந்து, கபடி, கோகோ. கையுந்துபந்து, கூடைப்பந்து, எறிபந்து, கைப்பந்து, பூப்பந்து, மேசைப்பந்து, இறகுப்பந்து மற்றும் டென்னிஸ் முதலிய 12 வகையான குழு விளையாட்டுப் போட்டிகள் தேனி மாவட்டத்தில் பல்வேறு மையங்களில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் 06.02.2025 முதல் 08.02.2025 வரை மாணவியர்களுக்கும். 09.02.2025 முதல் 11.02.2025 வரை மாணவர்களுக்கும் நடைபெறவுள்ளன.

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் 5172 மாணவர்களும், 5172 மாணவியர்களுமாக மொத்தம் 10,344 பேர் கலந்து கொள்ள உள்ளனர். இப்போட்டிகளில் கலந்து கொள்ள உள்ள அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தேனி அல்லிநகரம் நகர்மன்றத் தலைவர் ரேணுபிரியா பாலமுருகன், துணைத் தலைவர் செல்வம், திட்டக்குழு உறுப்பினர் நாராயண பாண்டியன், முதன்மை உடற்கல்வி ஆய்வாளர் கோபாலகிருஷ்ணன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் இந்திராணி, மாவட்ட கருவூல அலுவலர் அருணாச்சலம், மாவட்ட விளையாட்டு அலுவலர் சிவக்குமார் மற்றும் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த விளையாட்டு மாணவ, மாணவியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சிவகங்கை மாவட்டத்தில் பொது விநியோக திட்டத்தின் கீழ் நாளை சிறப்பு முகாம்கள்! ஆட்சியர்

சிவகங்கை பிப்.7



சிவகங்கை மாவட்டம் பொது விநியோகத்திட்டத்தில் 2025ம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்கான மக்கள் குறைதீர்க்கும் சிறப்பு முகாம் வருகின்ற 08.02.2025 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை சிவகங்கை மாவட்டம் முழுவதும் அனைத்து வட்ட வழங்கல் அலுவலகங்களிலும் நடைபெறவுள்ளது.

இம்முகாமில் குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், முகவரி மாற்றம், புதிய குடும்ப அட்டை / நகல் அட்டை, கைப்பேசி எண் பதிவு / மாற்றம் செய்தல் மற்றும் பொது விநியோக கடைகளின் செயல்பாடுகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தரம் குறித்த புகார்களை தெரிவிக்கும் பொருட்டும் பொதுமக்கள் தாங்கள் குடியிருக்கும் வட்டத்தில் அந்தந்த வட்ட வழங்கல் அலுவலகத்தில் மனு செய்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் மதுவிலக்கு மற்றும் குற்ற வழக்குகளில் ஈடுபட்டு கைப்பற்றப்பட்ட 17 டூவீலர்கள் (பிப்ரவரி 18 )காலை 10:00 மணிக்கு சிவகங்கை ஆயுதப்படை மைதானத்தில் பொது ஏலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத் தலைமையில் நடைபெற உள்ளது.இதில் கலந்துகொள்ள விரும்புவர்கள் பொது ஏலம் நடைபெறுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன் ஆதார் அட்டை நகலுடன் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு அலுவலகத்தில் முன்பணம் செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவு செய்தவர்கள் மட்டுமே பொது ஏலத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் பள்ளி கல்வித்துறை சார்பில், பள்ளி கல்வித்துறை அலுவலர்களுக்கான ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் தலைமையில் நடைபெற்றது. அருகில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கணேஷ் மூர்த்தி தூத்துக்குடி வருவாய் கோட்டாட்சிபர் பிரபு கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர மகாலட்சுமி ஆகியோர் உள்ளனர்.

# முல்லை பெரியாறு லோயர் கேம்ப் பகுதியிலிருந்து மதுரை மாநகருக்கு குடிநீர் வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை ஆணையாளர் ஆய்வு

மதுரை, பிப்.7



மதுரை மாநகருக்கு அம்ரூத் திட்டத்தின் கீழ் முல்லை பெரியாறு லோயர் கேம்ப் பகுதியிலிருந்து மதுரை மாநகருக்கு குடிநீர் வழங்க செயல் படுத்தப்பட்டு வரும் குடிநீர் மேம்பாட்டு திட்டப் பணிகளை ஆணையாளர் சித்ரா விஜயன், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மதுரை மாநகராட்சி பகுதியில் அனைத்து பொதுமக்களுக்கும் சீரான முறையில் தினசரி குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டு அம்ரூத் திட்டத்தின் கீழ் ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் ரூ.1653.21 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டு திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அம்ரூத் திட்டத்தின் கீழ் முல்லை பெரியாறு லோயர் கேம்ப் பகுதியில் தடுப்பணை, ஆற்று நீரேற்று நிலையம் அமைத்தல், பண்ணைப்பட்டி சுத்திகரிப்பு நிலையம் வரை 96 கி.மீ. நீளத்திற்கு சுத்திகரிக்கப்படாத குடிநீர் பிரதானக் குழாய் பதித்தல், பண்ணைப்பட்டி 125 எம்.எல்.டி. குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல், பண்ணைப்பட்டியிலிருந்து மதுரை மாநகர் வரை 55.44 கி.மீ. நீளத்திற்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பிரதான குழாய் பதித்தல், 37 குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் மற்றும் ஒரு தரைமட்ட தொட்டி கட்டுதல், மாநகராட்சியின் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் 32 வார்டுகளில் 855 கி.மீ நீளத்திற்கும் மற்றும் மாநகராட்சியின் மையப் பகுதியில் உள்ள 57 வார்டுகளில் 813 கி.மீ நீளத்திற்கும் குடிநீர் விநியோக குழாய்கள் பதித்தல் மற்றும் வீட்டு இணைப்புகள் வழங்குதல், உள்ளிட்ட பல்வேறு பணிகள் ஐந்து சிப்பங்களாக பிரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் மதுரை மாநகராட்சி பகுதிகளில் உள்ள 100 வார்டு பகுதிகளுக்கும் சீரான முறையில் குடிநீர் விநியோகம் வழங்கப்பட உள்ளது.

முல்லை பெரியார் லோயர் கேம்ப் பகுதியில் அமைக்கப் பட்டு வரும் தலைமை நீரேற்று நிலையம், பொதுப்பணித் துறை மூலம் கட்டப்பட்டு வரும் தடுப்பணை பணிகள், குடிநீர் குழாய்கள் பதித்தல் உள்ளிட்ட பணிகளை ஆணையாளர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து மதுரை மாநகருக்கு குடிநீர் வழங்குவதற்காக பண்ணைப் பட்டியில் புதிதாக கட்டப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு குடிநீர் திட்ட மேம்பாட்டு பணிகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். முல்லைப் பெரியாறு கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் மேற் கொள்ளப்பட்டுவரும் பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு ஆணையாளர் உத்தரவிட்டார்.

முன்னதாக மதுரை மாநகராட்சி செல்லூர் பாலம் ஸ்டேசன் ரோடு அருகில் செல்லூர் கண்மாயில் இருந்து வைகை ஆற்றில் தண்ணீர் செல்வதற்காக புதிதாக கட்டப்பட்டு வரும் கால்வாய் கட்டுமான பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். மேலும் செல்லூர் பகுதியில் உள்ள மாநகராட்சி கழிவுநீரேற்று நிலையத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைகள் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது தலைமை பொறியாளர் ரூபன் சுரேஷ், கண் காணிப்பு பொறியாளர் முகம்மது சபியுல்லா, செயற்பொறியாளர்கள் பாக்கியலெட்சுமி, சேகர், உதவி செயற்பொறியாளர் காமராஜ், மாநகராட்சி பொறியாளர்கள், அலுவலர்கள் உட்பட பலர் உடன் கொண்டனர்.

# வேலூர் மாவட்ட எஸ்.பி. தலைமையில் பொதுமக்கள் குறைதீர்வு நாள் கூட்டம்

வேலூர், பிப்.7




வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நா.மதிவாணன் உத்தரவின் பேரில், பொதுமக்கள் குறைதீர்வு நாள் ஒவ்வொரு வாரமும் புதன்கிழமையன்று நடத்தப்பட்டு வருகிறது.

இந்த சிறப்பு மனு நாளில் பொதுமக்கள் தங்கள் குறைகளை மனுக்களாக மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம், நேரில் மனு அளித்து குறைகளை கூறி வருகின்றனர். அதுமட்டுமின்றி வாரத்திலுள்ள அனைத்து வேலை நாட்களிலும், பொதுமக்களின் மனுக்களை நேரில் பெற்று உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, பொதுமக்களின் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு வருகின்றது.

இதனைத் தொடர்ந்து 05.02.2025 ஆம் தேதி மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் தலைமையில் நடைபெற்ற, சிறப்பு பொதுமக்கள் குறை தீர்வு மனு நாளில் 35 மனுக்கள் பெறப்பட்டு மனுக்கள் மீது உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்துள்ளார்.

மேலும், கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் அண்ணாதுரை (இணையவழி குற்றப்பிரிவு) மற்றும் வெங்கடேசன் (பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவு) காவல்துறையினர் மற்றும் காவல் துறை அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

# 2025-2026 ஆம் கல்வியாண்டிற்கு புதிய தொழிற் பள்ளிகள் துவங்குதல் குறித்து சிவகங்கை மாவட்ட ஆட்சியர் விளக்கம்

சிவகங்கை பிப்.7



சிவகங்கை மாவட்டத்தில் 2025-2026 ஆம் கல்வியாண்டிற்கு புதிய தொழிற் பள்ளிகள் துவங்குதல், அங்கீகாரம் புதுப்பித்தல், தொழிற் பள்ளிகளில் புதிய தொழிற் பிரிவுகள் / தொழிற் பிரிவுகளில் கூடுதல் அலகுகள் துவங்குதல் ஆகியவற்றிற்கு www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் .

மேலும், 2025 2026 ஆம் கல்வியாண்டிற்கான அங்கீகாரம் பெற, ஒரு தொழிற்பள்ளி இணையதளம் வாயிலாக ஒரு விண்ணப்பம் சமர்ப்பித்தால் போதுமானது. அதுமட்டுமன்றி, விண்ணப்பிக்கவுள்ள அனைத்து தொழிற் பிரிவுகள், கூடுதல் அலகுகள், தேவையான விவரங்கள் அனைத்தும் ஒரே விண்ணப்பத்தில் மட்டுமே விண்ணப்பித்திடல் வேண்டும். விண்ணப்ப கட்டணம் மற்றும் ஆய்வு கட்டணம் RTGS/NEFT மூலமாக செலுத்த வேண்டும்.

அனைத்து தொழிற் பிரிவுகளுக்கும் சேர்த்து விண்ணப்பக்கட்டணமாக ரூபாய் 5,000/ மற்றும் ஆய்வு கட்டணமாக ரூபாய் 8,000/ செலுத்த வேண்டும்.

மேலும், 2025 2026 ஆம் கல்வியாண்டிற்கு புதிய தொழிற் பள்ளிகள் துவங்குதல், அங்கீகாரம் புதுப்பித்தல், தொழிற் பள்ளிகளில் புதிய தொழிற் பிரிவுகள் / தொழிற் பிரிவுகளில் கூடுதல் அலகுகள் துவங்குதல் ஆகியவற்றிக்கு வருகின்ற 28.02.2025 ஆம் தேதிக்குள் விண்ணப்பித்திடல் வேண்டும். 28.02.2025 ஆம் தேதிக்கு பின் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலும், அங்கீகாரம் குறித்த தகவல் மற்றும் அறிவுரைகளை www.skilltraining.tn.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாகவும், கூடுதல் விபரங்களுக்கு 04575 290625 என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது detischennai@gamil.com என்ற மின்னஞ்சல் முகவரியின் வாயிலாகவோ தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

மாலை தந்தி



# நெல்லை விழாவிற்கு வருகை தந்த முதல்வர் ஸ்டாலினுக்கு தூத்துக்குடி விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு









தூத்துக்குடி, பிப்.7

திருநெல்வேலியில் நடைபெறவுள்ள பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக சென்னையில் இருந்து விமானம் மூலம் தூத்துக்குடிக்கு நேற்று வருகை தந்த முதல்வருக்கு தூத்துக்குடி வடக்கு, தெற்கு மாவட்ட திமுக சார்பில் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தில் வியாழன், வெள்ளி ஆகிய இரு தினங்கள் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையில் இருந்து விமானம் மூலம் தூத்துக்குடி விமான நிலையத்திற்கு நேற்று காலை 11.25 மணிக்கு வருகை தந்தார். அவருக்கு தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் சார்பில் மாவட்ட கலெக்டர் இளம் பகவத், மாவட்ட எஸ்.பி ஆல்பர்ட் ஜான் ஆகியோர் வரவேற்றனர்.

தொடர்ந்து, தூத்துக்குடி வடக்கு, தெற்கு மாவட்ட செயலாளர்களும், அமைச்சர்களுமான கீதா ஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. மாநகராட்சி சார்பில் மேயர் ஜெகன் பெரியசாமி, ஆணையர் மதுபாலன், கோட்டாட்சியர் பிரபு ஆகியோர் வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் நேரு, சபாநாயகர் அப்பாவு, எம்.பி. ராபர்ட் புரூஸ், எம்எல்ஏக்கள் மார்க்கண்டேயன், சண்முகையா, அப்துல் வகாப், ரூபி மனோகரன், முன்னாள் அமைச்சர் மைதீன்கான், முன்னாள் எம்எல்ஏக்கள் முத்துலெட்சுமி, டேவிட்செல்வின், நெல்லை மேயர் கிட்டு என்ற ராமகிருஷ்ணன், முன்னாள் மேயர் சரவணன், நெல்லை கலெக்டர் கார்த்திகேயன், நெல்லை சரக டிஐஜி மூர்த்தி ஆகியோர் முதலமைச்சர் ஸ்டாலினுக்கு புத்தகம் வழங்கி வரவேற்றனர்.

பின்னர் மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜோயல், மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், துணை மேயர் ஜெனிட்டா, மாநில மீனவரணி துணை செயலாளர் புளோரன்ஸ், மாநில பொறியாளர் அணி துணைச்செயலாளர் அன்பழகன், மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ், மாவட்ட துணைச்செயலாளர்கள் ராஜ்மோகன் செல்வின், ஆறுமுகம், ஏஞ்சலா, நகர்மன்ற தலைவர் கருணாநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ரமேஷ், இராஜா, மண்டல தலைவர்கள் வக்கீல் பாலகுருசாமி, நிர்மல்ராஜ், கலைச்செல்வி, ஒன்றிய செயலாளர்கள் காசிவிஸ்வநாதன், சின்னபாண்டியன், சுப்பிரமணியன், கருப்பசாமி, முருகேசன், ராதாகிருஷ்ணன், சின்னமாரிமுத்து, மும்மூர்த்தி, செல்வராஜ், ராமசுப்பு, நவநீதக்கண்ணன், அன்புராஜன், மாநகர அவைத்தலைவர் ஏசுதாஸ், துணைச்செயலாளர்கள் கீதாமுருகேசன், கனகராஜ், பிரமிளா, மாவட்ட அணி அமைப்பாளர்கள் அந்தோணி ஸ்டாலின், மதியழகன், குபேர்இளம்பரிதி, கவிதாதேவி, அபிராமிநாதன், சீனிவாசன், மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள் அருணாதேவி, பிரபு, பார்வதி, பெனில்டஸ், பிரதீப், நிக்கோலாஸ்மணி, நாகராஜன், ராதாகிருஷ்ணன், டினோ, அருண்குமார், பகுதி செயலாளர்கள் சுரேஷ்குமார், ரவீந்திரன், மேகநாதன், ஜெயக்குமார், ராமகிருஷ்ணன், மாநகர அணி நிர்வாகிகள் ஜீவன்ஜாக்கப், அருண்சுந்தர், பரமசிவம், கிறிஸ்டோபர் விஜயராஜ், ஆனந்த சேகர், ரூபஸ், ரூபராஜா, முருக இசக்கி, ஜெயக்கனி, ரவி, செல்வின், பிரவீன்குமார், வினோத், பால்ராஜ், மகேஸ்வரன்சிங், நாராயணவடிவு, பகுதி இளைஞர் அணி அமைப்பாளரகள்; சூர்யா, செந்தூர்பாண்டி, மாவட்ட பிரதி நிதிகள் நாராயணன், சக்திவேல், செல்வகுமார், சேர்மபாண்டியன், ராஜ்குமார், கவுன்சிலர்கள் இசக்கி ராஜா, சரவணக்குமார், வைதேகி, சுப்புலெட்சுமி, ஜாண்சிராணி மற்றும் மணி, அல்பட், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தெற்கு மாவட்ட திமுக முன்னாள் மாவட்ட ஊராட்சித்தலைவர் பிரம்மசக்தி, மாவட்ட துணைச்செயலாளர்கள் ஜெயக்குமார் ரூபன், ஆறுமுகபெருமாள், ஜெபதங்கம் பிரேமா, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செந்தூர்மணி, மாடசாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் சொர்ணகுமார், முத்துச்செல்வன், இந்திரகாசி, ஆறுமுகபாண்டியன், ராஜலெட்சுமி, மாவட்ட அணி அமைப்பாளர்கள் ராமஜெயம், அருண்குமார், ரவி என்ற பொன்பாண்டி, சாரதா பொன்இசக்கி, செல்வகுமார், ரகுராமன், வீரபாகு, ஜான்பாண்டியன், துறைமுகம் ராமசாமி, ஜனஹர், சுரேஷ், ராஜேஷ், ஆனந்த், மகாவிஷ்ணு, ஸ்ரீதர்ரொட்ரிகோ, சுரேஷ்குமார், ரங்கநாதன் என்ற சுகு, கலீல் ரகுமான், செல்வபெருமாள், ஆறுமுகம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராமஜெயம், துணை அமைப்பாளர்கள் வக்கீல் பால்துரை, ஸ்டாலின், சுதாகர், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளரும் மாநகராட்சி கணக்குக்குழு தலைவருமான ரெங்கசாமி, ஒன்றிய செயலாளர்கள் ஜெயக்கொடி, சுப்பிரமணியன், பாலசிங், இளங்கோ, நவின்குமார், சதீஷ், ரவி, கொம்பையா, கோட்டாளம், பார்த்திபன், ஜோசப், ரமேஷ், பாலமுருகன், பொன் முருகேசன், இளையராஜா, சரவணக்குமார், ராமசாமி, சுரேஷ்காந்தி, பகுதி செயலாளர்கள் சிவக்குமார், ஆஸ்கர், பேரூர் செயலாளர்கள் இளங்கோ, ராயப்பன், சுப்புராஜ், நவநீதமுத்துக்குமார், கண்ணன், கோபிநாத், ராமஜெயம், முத்து வீரபெருமாள், நவநீதபாண்டியன், ஜமீன் சாலமோன், மால் ராஜேஷ், முருகானந்தம், ஒன்றிய துணைச் செயலாளர் வக்கீல் நாராயணன், கணேசன், ஹரிபாலகிருஷ்ணன், மாவட்ட பிரதிநிதிகள்; வெயில்ராஜ், தர்மராஜ், பூபேஸ்நாதன், நகர செயலாளர் சுடலை, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் நவீன்பாண்டியன் உள்பட பலர் கலந்து கொண்டு வரவேற்றனர்.

முதலமைச்சருடன் அமைச்சர்கள் துரைமுருகன், கண்ணப்பன், கேகேஎஸ்ஆர் ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, தலைமைச்செயலாளர் முருகானந்தம் உள்ளிட்டோர் உடன் வந்தனர். அதனைத் தொடர்ந்து முதலமைச்சர், கார் மூலம் திருநெல்வேலிக்கு புறப்பட்டுச் சென்று விழாவில் கலந்து கொண்டார். முதல்வர் வருகையை யடுத்து விமான நிலையத்தில் போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

# பண்ணைப்புரம் அரசு மேல்நிலைப்பள்ளி 59 வது ஆண்டு விழா




உத்தமபாளையம் பிப்07

தேனிமாவட்டம் உத்தமபாளையம் அருகே பண்ணைப்புரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக் கல்வித்துறை சார்பில் 59வது பள்ளி ஆண்டு விழா நடைபெற்றது. பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் விஜயக்குமார் தலைமை தாங்கினார். பள்ளி தலைமை ஆசிரியர் பிரியதர்ஷினி, பண்ணைப்புரம் கிராம கமிட்டி செயலாளர் சுரேஷ் முன்னிலை வகித்தனர். தமிழாசிரியர் அன்பழகன் வரவேற்புரை ஆற்றினார். சிறப்பு அழைப்பாளர்களாக தேனி மாவட்ட முதன்மைக்கல்வி கல்வி அலுவலர் இந்திராணி, மாவட்ட கல்வி அலுவலர் வசந்தா, பள்ளியின் முன்னாள் முதல் மாணவர் பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்ச்சியில் பெற்றோர் ஆசிரியர் கழக பொருளாளர் சுப்பிரமணி, ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் சரவணக்குமார், திமுக ஒன்றிய செயலாளர் குமரன், பண்ணைப்புரம் பேரூராட்சி தலைவர் லட்சுமி இளங்கோவன், பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள் முருகேசன், பாப்பையா,முன்னாள் பேரூராட்சித் தலைவர் சுகந்தராணி, எஸ்.எம்.சி. தலைவர் ரேணுகா தேவி,ஓய்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர் செந் தில்குமரன், உத்தமபாளையம் அனைவருக்கும் கல்வி இயக்க ஆசிரியர் பயிற்றுநர் பாண்டீஸ்வரி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பள்ளி ஆண்டு விழாவை முன்னிட்டு மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சி நடைபெற்றதுடன் பள்ளி ஆண்டறிக்கை வாசித்தனர். வகுப்பு வாரியாக கல்வியில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவர்களுக்கு பரிசு வழங்கியதுடன், விளையாட்டு, சுற்றுச்சூழல், கலை, இலக்கியம், தெருக்கூத்து மற்றும் நாட்டுப்புற நடனம், போட்டிகளில் கலந்து கொண்ட மாணவர்களுக்கும் பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கினர். இந்நிகழ்வில் பள்ளி அலுவலக பணியாளர்கள், பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள், பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள், பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியை கௌரி 12 ஆண்டுகளாக விடுமுறை எடுக்காமல் பணி புரிந்தற்காகவும், ஆறாம் வகுப்பு மாணவன் சமர்வனன் ஜூடோ போட்டியில் மாநில அளவில் மூன்றாம் இடத்தினை பெற்றததற்காகவும் பள்ளியின் சார்பில் பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழை வழங்கி கௌரவித்தனர். இந்நிகழ்ச்சியின் முடிவில் பட்டதாரி ஆசிரியை ஆனந்தி நன்றி கூறினார்.

## நீலகிரியில் அறிவிப்பு பலகை வைக்காமல் சாலை அமைக்கும் பணியால் வாகன ஓட்டிகள் அவதி



உதகை: பிப்.7

நீலகிரி மாவட்டம் லவ்டேல் இருந்து வி.பாலடா செல்லும் சாலையில் புதிதாக தார் சாலை அமைக்கபடுகிறது. இச்சாலை சுமார் 10 கி.மீ ஆகும் தற்போது வி.பாலடா அருகே பணி நடை பெறுகிறது. இவர்கள் எவ்வித அறிவுப்பு பலகையோ எவ்வித அறிவிப்பும் இன்றி பணி நடை பெறுவதால் லவ்டேல் இருந்து சுமார் 7. கி.மீ வாகனங்கள் வந்து திருப்பி அனுப்ப படுகிறது. இதனால் வாகன ஓட்டிகள் பெரிதும் அவதிக்குள்ளாகி திரும்பி செய்கிறார்கள். இவர்கள் லவ்டேல் பகுதியில் அறிவிப்பு பலகை வைத்திருந்தால் வாகன ஓட்டிகள் மாற்று பாதையில் சென்று இருப்பார்கள். இதனால் எரிபொருள் விரையம் மற்றும் காலநேரம் விரையம் ஏற்படுகிறது இது பற்றி சம்மந்த பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து அறிவுப்பு பலகை வைக்கபடுமா வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள்.



சிவகங்கை மாவட்டம், பையூர் பிள்ளைவயல் குருப் தி.புதூர் கிராமத்தில் கோவில் திருவிழாவை முன்னிட்டு மஞ்சு விரட்டு நடைபெறவிருப்பதால் பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க சிவகங்கை ரயில் நிலையத்திலிருந்து சூரக்குளம் வரையிலான சாலையில் சிவகங்கை கோட்டப் பொறியாளர் நெடுஞ்சாலை உத்தரவின் பேரில் சாலைப் பராமரிப்பு பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

## முகிலன் விளையில் அமைக்கப்பட்டு வரும் முதல்வர் மருந்தகத்தினை ஆட்சியர் ஆய்வு




கன்னியாகுமரி, பிப்.7

கன்னியாகுமரி மாவட்டம் கூட்டுறவு துறை சார்பில் முகிலன்வினை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கீழ் முகிலன் விளையில் அமைக்கபட்டு வரும் முதல்வர் மருந்தகம், கல்குளம் வட்டம் வள்ளியாறு உள்ளிட்ட பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகு மீனா, ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

முகிலன்விளையில் அமைக்கப்பட்டு வரும் முதல்வர் மருந்தகம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, இப்பணிகளை விரைந்து முடித்து வருகின்ற 15.02.2025 அன்று திறக்குமாறு அறிவுறுத்தினார்கள். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்கள்.

அதனைத்தொடர்ந்து நீர்வளத்துறை, கோதையாறு வடிநில கோட்டம், நாகர்கோவில், கோதையாறு வடிநில உப கோட்டம், தக்கலை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கல்குளம் வட்டம், வள்ளியாற்றில் ரூ.4.07 கோடி மதிப்பில் நிரந்தர வெள்ள சேத தடுப்பு பணிகள் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டப்பட்டது. தற்போது 65 சதவீதம் பணிகள் முடிவு பெற்றுள்ளது. மேலும் தற்போது பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால், அணை மூடப்பட்ட மூன்று மாத காலத்திற்குள் மீதமுள்ள பணிகளை முடிக்குமாறு துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் வெள்ளிமலை பேரூராட்சிக்குட்பட்ட விவசாயிகளின் கோரிக்கையினை கேட்டறிந்தார்கள்.

நடைபெற்ற ஆய்வில் கன்னியாகுமரி மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் சிவகாமி, நீர்வளத் துறை உதவி பொறியாளர் த.கதிரவன், நாகர்கோவில் கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் முருகேசன், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# மதுரை உலகத் தமிழ்ச் சங்கமும், கோ.புதூர் அல்அமீன் மேல்நிலைப் பள்ளியும் இணைந்து நடத்தும் 151ஆவது 'தமிழ்க்கூடல் நிகழ்வு




மதுரை, பிப்.7

மதுரை உலகத் தமிழ்ச் சங்கமும், கோ.புதூர் அல்அமீன் மேல்நிலைப் பள்ளியும் இணைந்து நடத்தும் 151ஆவது 'தமிழ்க்கூடல்| நிகழ்வு உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்ட வளாகக் கூட்ட அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உலகத் தமிழ்ச் சங்கத்தின் ஆய்வறிஞர் முனைவர் சு.சோமசுந்தரி அவர்கள் நிகழ்வினை ஒருங்கிணைத்தார். இந்நிகழ்விற்கு உலகத் தமிழ்ச் சங்க இயக்குநர் (பொ) முனைவர் ஔவை ந.அருள் அவர்கள் தலைமை தாங்கினார். இந்நிகழ்வில் அல்அமீன் மேல்நிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியர் ஷேக்.ஷேக்நபி அவர்கள் முன்னிலை வகித்தார்.

மேலைச்சிவபுரி கணேசர் கலை, அறிவியல் கல்லூரியின் உதவிப்பேராசிரியரும் ஆய்வு நெறியாளருமான முனைவர் பொன்.கதிரேசன் 'அயலகத் தமிழர்களின் பணிகளும் படைப்புகளும்' எனும் தலைப்பில் தமிழ்க்கூடலுரை நிகழ்த்தினார். அவர்தம் உரையில், "மொழியால் சிறப்புப் பெற்றவர்கள் அயலகத் தமிழர்கள். அயலகத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்த யவனர்கள், ரோமானியர்கள் தமிழர்களோடு வணிகம் செய்ததமையைச் சங்க இலக்கியங்கள் பகர்கின்றன. அயலகத் தமிழர்களின் தொடர்பால்தான் அரிசி, இஞ்சி, தோகை ஆகிய ஈப்ரூ மொழிச்சொற்கள் தமிழில் இடம்பெற்றுள்ளது. பர்மாவில் உள்ள காழகத்தீவு குறித்த செய்தி பட்டினப்பாலையில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. "ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்" என்ற பட்டினப் பாலை வரிகள் கடல்மூலம் நமது நாட்டுப்பொருள்களை அயல்நாடுகளுக்கும் அயல்நாட்டுப் பொருள்களை நம் நாட்டுக்கும் ஏற்றுமதி, இறக்குமதி நடைபெற்ற செய்தியைக் கூறுகிறது. யுனெஸ்கோ அயலகத் தமிழர்களுக்கான 17 இலக்குகளை அறிவித்துள்ளது. அயலகத் தமிழர்களின் படைப்புகள் வெறும் காகிதக்கட்டுகளாக அமையாமல் கருத்துக்களஞ்சியமாகத் திகழ்கிறது" என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்விற்குத் தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், அல் அமீன் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், தமிழ் ஆர்வலர்கள், கவிஞர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## மாடம்பாக்கத்தில் கோபி ஸ்டுடியோவின் புதிய கிளை திறப்பு



சேலையூர் பிப்.7

சென்னை சேலையூர் பாரத் பல்கலை கழகம் அருகில் GOPI PHOTOS கடந்த 28 வருடமாக செயல்பட்டு வருகிறது. தொடர்ந்து வாடிக்கையாளரின் நன்மதிப்பை பெற்று சிறப்பாக செயல்பட்டு வரும் கோபி ஸ்டுடியோவின் அடுத்த கட்ட பரிமான வளர்ச்சியாக புதிய கிளை மாடம்பாக்கத்தில் திறக்கப்பட்டுள்ளது.

மாடம்பாக்கம், பெரியார் நகரில் கோபி ஸ்டுடியோவின் புதிய கிளை திறப்பு விழா நடைப்பெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பாஜக முன்னாள் கோட்ட அமைப்பு செயலாளர் ச.நடராஜன், பாஜக தமிழ்வளர்ச்சி பிரிவு மாநில துணை தலைவர் டி.ஜி.எம்.பிரபாகரன், இந்தியன் வங்கி சேலையூர் கிளை மேலாளர் ஜோஸ் ஆகியோர் கலந்து ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் மண்டல் தலைவர் செந்தில்வேல், செங்கல்பட்டு மாவட்ட TNULM அமைப்பின் A.P.O புவனேஸ்வரி, தாம்பரம் மாநகராட்சி C.O திவ்யா சீனிவாசன், ராஜேஸ்வரி, ALF குழு தலைவர் கலைவாணி கோபி, TP-SHG செயலாளர் ஸ்டுடியோ பாபு, இன்பராஜ், மற்றும் பாஜக நிர்வாகிகள் குட்டி, திருமுருகன், செல்வராஜ், கமல், ஜெகதீசன், ரமேஷ், அமுதம் ரிப்போர்ட்டர் வாஞ்சிநாதன், பம்மல் மகேஷ், துவாரக்நாத் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்களுக்கு கோபி ஸ்டுடியோவின் உரிமையாளரும், பாஜக முன்னாள் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளருமான முனைவர் கோபி சால்வை அணிவித்து

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161